## வெள்ளோட்டில்

# காலிங்கராயன் சிலை திறப்பு விழா

தென்முகம் வெள்ளோடு சாத்தந்தை குலம் கனகபுரம் கரைசார்ந்த காலிங்கராயன் 725 ஆண்டுகளுக்கு முன்பே நதிநீர் இணைப்புக்கு முன்னோடியாக விளங்கி காவிரியும், பவானியும் சங்கமிக்கும் பவானி கூடல் நகரிலிருந்து 56 மைல் தூரம் பொறியாளர்களும் வியக்கும் வண்ணம் ஒரு புறம் மட்டும் கரை அமைத்து நொய்யல் ஆற்றோடு இணைத்து வியத்தகு சாதனை படைத்தவர் வெள்ளோடு சாத்தந்தை காலிங்கராயன்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் மூவேந்தருக்கும் முடிசூட்டும் உரிமை பெற்றிருந்த கொங்கு வேளாளர் இனத்தை சார்ந்த காலிங்கராயன் அர்ப்பணிப்பு உணர்வோடு உருவாக்கிய காலிங்கராயன் கால்வாய் இன்றளவும் சாத்தந்தை குலமக்களால் அனுபவிக்க முடியாத, கொங்கு நாட்டின் வற்றாத பொருளாதாரத்திற்குண்டான உயிர் நாடியாகும். மூவேந்தர்களாலும் போற்றப்பட்ட கொங்கு வேளாளர் சமூகத்தைச் சார்ந்த, தென்முகம் வெள்ளோடு சாத்தந்தை காலிங்கராயன் அவர்களின் சிலை திறப்பு விழா எதிர்வரும் தை மாதம் 5-ம் தேதி (19-1-07) அன்று காலை 9.00 மணியளவில் சென்னிமலை ஒன்றியப் பெருந்தலைவர் பயிரன்குல ஓ. சின்னுசாமிக்கவுண்டர் தலைமையில் தெ. வெள்ளோடு சாத்தந்தை தொட்டிபாளையம் மணி (எ) செங்கோட்டையன் (மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்) முன்னிலையில், தென்முகம் வெள்ளோடு சாத்தந்தை குல இராசா சுவாமி நற்பணி மன்ற தலைவர் ந.தி. கண்ணுச்சாமி வரவேற்புரையாற்றிட தமிழக கைத்தறித் துறை அமைச்சர் மாண்புமிகு என்.கே.கே.பெ. ராஜா அவர்கள் காலிங்கராயன் சிலையை திறந்து வைக்கிறார். இவ்விழாவில் வெள்ளோடு காணியாளர்கள் வரலாறு எனும் வரலாற்று நூலை மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் வெளியிட அதனை [illegible] நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கே. கார்வேந்தன் அவர்கள் பெற்றுக்கொள்கிறார். காலிங்கராயனின் 37ம் தலைமுறை வாரிசு திருமிகு. சித்தார்த் AMR காலிங்கராயர் அவர்களுக்கு காங்கயம் சட்டமன்ற உறுப்பினர் விடியல் சேகர் அவர்கள் நினைவுப்பரிசு வழங்கி சிறப்பிக்கிறார். கொங்குவேளாளர்குல வரலாறும் சிறப்புகளையும் குறித்து தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக பேராசிரியர் கல்வெட்டு ஆய்வாளர் சாத்தந்தை புலவர் செ. இராசு எம்.ஏ., பி.ஹச்.டி., அவர்கள் சிறப்புறையாற்றுகிறார்.



காலிங்கராயன் கால்வாயின் முழுப் பலனையும் பெறும் மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இரா.மா. பழனிச்சாமி அவர்களும், வானிதனில் அணைகண்ட சாத்தந்தை குல குமாரவலசு ஊராட்சிமன்ற தலைவர் திருமதி. சந்திரகலா சக்திவேல் வாழ்த்துரைக்க, கனகபுரம் ஊராட்சி மன்ற தலைவர் சாத்தந்தை மகுடேஸ்வரன் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவடைகிறது. விழாவில் குலபெருமக்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

ஞானி. கனகராசா